[2002 மார்ச் 28

நீர்மட்டம் மிகவும் கீழே சென்றுவிட்ட நிலையில் மேற்படி தெப்பக் குளத்தில் நிரப்பப்படும் நீர் நிலைத்து நிற்பது இல்லை. எனவே, நிரந்தரமாக நீர் நிற்காத நிலையில் படகு விடும் சூழ்நிலை தற்சமயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை.

முற்பகல் 10-15

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் இருக்கிற மீனாட்சி அம்மன் கோயில், அடுத்தபடியாக மாரியம்மன் தெப்பக்குளம் ஆகியவைபற்றி அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு நேரடியாகவே வைகையிலிருந்து தண்ணீர் வருகிற வாய்ப்பு இருந்தது. அது ஆக்கிரமிப்பின் காரணமாக தடைபட்டுப் போய்விட்டது. அமைச்சர் குறிப்பிட்டதுபோல தெப்பத் திருவிழாவிற்கு மட்டும் எங்கிருந்தாவது தண்ணீர் நிரப்பி விட்டு அந்த தெப்பத் தேரை ஓட்டிவிட்டு முடித்து விட்டு அப்படியே விட்டு விடுகிறார்கள். மற்ற நேரம் எல்லாம் அது பந்து விளையாடுகிற இடமாக மாறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கீழே பாறை இருக்கிற காரணத்தினாலே விரைவாக தண்ணீர் வற்றக்கூடிய வாய்ப்பு இல்லை. ஏற்கெனவே நேரடியாக வைகையிலேயிருந்து தண்ணீர் வருகிற வாய்ப்பு இருந்தது. அது தடைபட்டுப் போய் இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி நேரடியாகத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா, அல்லது அது மிகமிக முக்கியமான ஒரு சுற்றுலாத் தலம் என்பதால், ஏதாவது ஒரு வகையிலே வருடம் முழுவதும் தண்ணீர் நிரப்புவதற்கான ஏற்பாடு செய்வதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மூலமாகவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும் மதுரை மாநகராட்சியினுடைய ஆணையரைக் கலந்தாலோசித்து அடுத்த ஆண்டில் இதற்கு நிரந்தரமாக வைகை ஆற்றிலேயிருந்து தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

2002 மார்ச் 28]

35—

கோயில் கோபுரம்

***7967—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் அருள்மிகு தாமோதரப் பெருமாள் கோயிலின் முன்புறக் கோபுரம் பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி ரூ. 11.50 இலட்சம் செலவில், இராஜகோபுர திருப்பணி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கும் அடங்கும். திருப்பணிக் குழு அமைத்து, இராஜகோபுர திருப்பணிகள் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. நெப்போலியன், Shooting-க்குப் போய்விட்டாரா? (சிரிப்பு).

வினா எண் 36, திரு. ப. அரசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

36—

ஆரம்ப சுகாதார நிலையம்

***5602—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—